# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No.87 of 2025
Prosecution Witness No.P.W.6 (L.W.12)

| | |
|---|---|
| Name | பிரகாஷ் |
| Father/Husband Name | பாண்டியன் |
| Calling/Occupation | Doctor |
| Age | 49 |
| Address | Vellore. |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 24.02.2026.

(A1 and A2 Present)

**முதல் விசாரணை**

நான் தற்போது வேலூர் ஆண்கள் மத்திய சிறையில் மூத்த அறுவை சிகிச்சை நிபுணராக பணியாற்றி வருகிறேன். கடந்த 05.05.2015 அன்று மாலை 05.30 மணி அளவில் நான் வேலூர் அரசு பெண்ட்லேண்ட் மருத்துவமனையில் மருத்துவராக பணியில் இருந்தபோது மணிகண்டன் வயது 24, த/பெ. சீனிவாசன் என்பவர் சிகிச்சைக்காக வந்தவரை விசாரித்தபோது அவரை இரண்டு அடையாளம் தெரிந்த நபர்கள் கண்ணாடி கிளாஸால் தாக்கியதாக தினகரன் தியேட்டர் ரோடு, அன்று மாலை 05.00 மணி அளவில்

தாக்கியதாக சொன்னவரை பரிசோதனை செயதபோது அவருக்கு முகத்தின் இடது பக்க கன்னம் மற்றும் கீழ் தாடை மற்றும்நெற்றியில் நடுவில் குத்தி இரத்தக்காயம் ஏற்படுத்தியதாக சொன்னார்.

அவருக்கு முகத்தில் 10 X 5 செ.மீ அளவில் கிழிந்த காயம் காணப்பட்டது. மேலும் முகத்தில் ஆழமான கிழிந்தகாயம் காணப்பட்டது. அவருக்கு முதுகில் வலி இருந்ததாக சொன்னார். அவருக்கு முதல் உதவி சிகிச்சை அளித்து அடுக்கம்பாறை அரசு மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக அனுப்பி வைத்தோம். அடுக்கம்பாறை அரசு மருத்துவமனையில் எக்ஸ்ரே, சிடி ஸ்கேன் ஆகியவைகள் எடுத்து பார்கக்ப்பட்டதில் அவருக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயம் என்று தெரிவிக்கப்பட்டது. இது குறித்து நான் வழங்கிய விபத்து பதிவேடு அ.த.சா.ஆ.1 ஆகும்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

ஒரு நபர் மாடி படியில் இருந்த நிலை தடுமாறி கீழே விழுந்தால் மேலே சொன்ன காயங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றால் உள்ளது. உடைந்து போன கண்ணாடி பாட்டிலை காண்பித்து போலீசார் விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான்.

**மறுவிசாரணை – இல்லை.**

ELAVARASAN Digitally signed by ELAVARASAN Date: 2026.02.24 17:50:30 +0530

# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No.87 of 2025
Prosecution Witness No.P.W.7 (L.W.10)

| | |
|---|---|
| Name | வெங்கடேசன் |
| Father/Husband Name | பரத் |
| Calling/Occupation | கூலி |
| Age | 50 |
| Address | வேலூர். |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 24.02.2026.

(A1 and A2 Present)

**முதல் விசாரணை**

நான் வேலூரில் சமையல் வேலை செய்து வருகிறேன். கடந்த 2015ம் வருடம் தேதி மாதம் நினைவில்லை நானும் சந்துரு குமார் என்பவரும் தெற்கு காவல் நிலையம் பக்கமாக சென்றோம் அப்போது போலிசார் எங்களை காவல் நிலையம் உள்ளே அழைத்து கையொப்பம் வாங்கிக்கொண்டார்கள். பார்வை மகசரில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையதுதான். எதற்காக கையொப்பம் வாங்கினார்கள் என்று தெரியாது. வேறு ஒன்றும் வழக்கு பற்றி தெரியாது.

**சாட்சியை பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டது.**

**கு.வி. அரசு தரப்பில்**

கடந்த 06.05.2015 அன்று காலை சுமார் 11.00 மணி அளவில் போலீசார் சம்பவம் நடந்த இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயாரித்து அதில் எங்களிடம் அப்போதே அங்கேயே கையொப்பம் பெற்றுக்கொண்டனர் என்றும் அதேபோன்று சம்பவ இடத்தில் காலை 11.30 மணிக்கு அன்றே உடைந்த கூல்டிரிங்ஸ் பாட்டில் கண்ணாடி துண்டுகளை கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றி எங்களிடம் கையாப்பம் பெற்றுக்கொண்டனர் என்று சொல்லிவிட்டு தற்போது எதிரிகளை காப்பாற்ற பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை – இல்லை**

ELAVARASAN Digitally signed by ELAVARASAN Date: 2026.02.24 17:50:36 +0530

# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No.87 of 2025
Prosecution Witness No.P.W.8 (L.W.11)

| | |
|---|---|
| Name | சந்துரு குமார் |
| Father/Husband Name | பழனி |
| Calling/Occupation | கூலி |
| Age | 36 |
| Address | வேலூர். |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 24.02.2026.

(A1 and A2 Present)

**முதல் விசாரணை**

நான் சென்னையில் லோடு மேன் தொழில் செய்து வருகிறேன். சம்பவ சமயத்தில் சுமார் 10 வருடங்களுக்கு முன்பு நான் வேலூரில் இருந்தேன். அ.சா.7 எனக்கு தெரிந்தவர். ஆஜர் எதிரியை தெரியாது. இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது.

**சாட்சியை பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டது.**

**கு.வி. அரசு தரப்பில்**

கடந்த 06.05.2015 அன்று காலை சுமார் 11.00 மணி அளவில் போலீசார் சம்பவம் நடந்த இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர்

மற்றும் வரைபடம் தயாரித்து அதில் எங்களிடம் அப்போதே அங்கேயே கையொப்பம் பெற்றுக்கொண்டனர் என்றும் அதேபோன்று சம்பவ இடத்தில் காலை 11.30 மணிக்கு அன்றே உடைந்த கூல்டிரிங்ஸ் பாட்டில் கண்ணாடி துண்டுகளை கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றி எங்களிடம் கையாப்பம் பெற்றுக்கொண்டனர் என்று சொல்லிவிட்டு தற்போது எதிரிகளை காப்பாற்ற பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை – இல்லை**

ELAVARASAN
Digitally signed by ELAVARASAN
Date: 2026.02.24 17:50:42 +0530

# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No.87 of 2025
Prosecution Witness No.P.W.9 (L.W.12)

| | |
|---|---|
| Name | நாகராஜன் |
| Father/Husband Name | களியபெருமாள் |
| Calling/Occupation | காவல் ஆய்வாளர் |
| Age | 49 |
| Address | பாகாயம், ஓட்டேரி. |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 24.02.2026.

(A1 and A2 Present)

**முதல் விசாரணை**

நான் தற்போது வேலூர் மாவட்டம் அரியூர் காவல் நிலைய ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். நான் கடந்த 06.05.2015 அன்று வேலூர் தெற்கு காவல் நிலைய ஆய்வாளராக பணியில் இருந்தபோது என்னுடன் பெண் சிறப்பு உதவி ஆய்வாளர் வரலட்சுமி என்பவர் பணியில் இருந்தார். அன்று காலை 06.00 மணிக்கு அடுக்கம்பாறை அரசு மருத்துவமனை மருத்துவக்கல்லூரியிலிருந்து கிடைத்த தகவலின் பெயரில் மணிகண்டனிடம் புகார் வாக்குமூலம் பெற்றார். அந்த புகார் வாக்குமூலம் அ.த.சா.ஆ.2.

பின்னர் நிலையம் வந்து நிலைய குற்ற எண் 294/2015, பிரிவுகள் 294(பி), 342, 307 இத.ச பிரிவின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். அந்த முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.3. பின்னர் முதல் தகவல் அறிக்கை மற்றும் அதன் நகல்களை சம்பந்தப்பட்ட நீதிமன்றம் மற்றும் உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்துவிட்டு வழக்கின் கோப்பினை என் விசாரணைக்காக வைத்தார் நான் அன்றே சம்பவ இடமான ஆரணி ரோடு தினகரன் தியேட்டர் அருகில் உள்ள முருகன் செட்டியார் ஜெனரல் ஸ்டோர் அருகில் சாட்சிகள் அ.சா.7 மற்றும் 8 ஆகியவர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் தயாரித்து மேற்கண்ட சாட்சிகளின் கையொப்பம் பெற்றேன். அந்த பார்வை மகசர் அ.த.சா.ஆ.4.

அதன் பின்னர் சம்பவ இடத்தில் சம்பவத்திற்கு பயன்படுத்தப்பட்ட உடைந்த கண்ணாடி துண்டுகளை அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகசர் அ.த.சா.ஆ.5. வரைபடம் அ.த.சா.ஆ.6. சம்பவ இடத்தில் கைப்பற்றப்பட்ட உடைந்த கண்ணாடி துண்டுகள் சா.பொ.1 வரிசை. பின்னர் நான் சாட்சிகள் அன்றே சுரேஷ், மணிகண்டன், சரத்குமார், முருகன், சலீம், விஜி, சவுந்தர், வெங்கடேசன், சந்துரு குமார் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

வழக்கு சொத்தை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். சம்பவம் நடந்தது உண்மை என தெரிய வந்ததால் சிகிச்சையில் இருந்த வினோத்குமார் என்பவரை 08.05.2015 அன்று 13.30 மணிக்கு வேலூர் அடுக்கம்பாறை அரசு மருத்துவமனையில் வைத்து கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். பின்னர் 15.06.2015 அன்று சாட்சிகள் மணிகண்டன், சரத்குமார், முருகன் ஆகியோர்களை விசாரித்து மறு வாக்குமூலம் பதிவு செய்தேன். அதில் சம்பவத்தில் ஈடுபட்டது மூன்று நபர்கள் அல்ல எதிரிகள் வினோத்குமார் மற்றும் கோலக்கார மணி என தெரிய வந்தது. பின்னர் சீனிவாசன் மற்றும் ஐயப்பன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

பின்னர் காயம்பட்ட மணிகண்டனுக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் விஜயலட்சுமி, மற்றும் பிரகாஷ் ஆகியோர்களை விசாரித்து வாக்குமுலங்கள் தனித்தனியாக பதிவு செய்தேன். பின்னர் காயத்தின் தன்மை சொற்பகாயம் என் தெரிய வந்து எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 342, 294(பி), 307 இ.த.ச உ/இ 34 இ.த.ச பிரிவின் கீழ் பிரிவு மாறுதல் அறிக்கை தயாரித்து சம்பந்தப்பட்ட நீதிமன்றத்தில் இறுதி அறிக்கையுடன் அனுப்பி வைத்தேன். அந்த பிரிவு மாறுதல் அறிக்கை அ.த.சா.ஆ.7.மேலும் இந்த வழக்கில் காயம்பட்ட நபர் இறந்துவிட்டார். மேலும் என்னுடை விசாரணை காலத்தில் அ.சா.1 முதல் 5 வரை உள்ளவர்கள் வழக்கில் உள்ள கோப்பில் உள்ளவாறு என் முன்பு வாக்குமூலம் அளித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

அனைத்து ஆவணங்களும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றும், எந்த பொருட்களும் கைப்பற்றப்படவில்லை என்றும் தெரியாத நபர்கள் யாரோ தாக்கியதற்காக எதிரி மீது பொய் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரிகளை சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளோம் என்றும் ஆஜர் எதிரிகளுகும் இந்த வழக்கிற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

ELAVARASAN Digitally signed by ELAVARASAN Date: 2026.02.24 17:50:51 +0530